**முதன்மை மாவட்ட நீதிமன்றம், செங்கல்பட்டு**

| | | | | |
|---|---|---|---|---|
| **வழக்கு எண்** | OS | 237 | of | 2019 |

**2024-ம் ஆண்டு ஜுன் திங்கள் 10-ம் நாளான இன்று**

**வாதி/பிரதிவாதி மனுதாரர்/எதிர்மனுதாரர்** **தரப்பில் வா.சா.1-வது சாட்சியின் வாக்குமூலமானது 1973 ம் ஆண்டின் சட்டத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு திரு.நாகராஜன், Bench Clerk Grade-I என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **நெல்சன் சாமுவேல்** | **தந்தை பெயர்** | |
| **கிராமம்** | | **கணவர் பெயர்** | |
| **ஜாதி** | | **தாலுக்கா** | |
| | | **சமயம்** | |
| **தொழில்** | | **வயது** | |

**நாள்-10.06.2026**

**வா.சா.-1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

என்னுடைய அறிவிப்பு, வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் 5 சதவீதம் கட்டுமானம் மட்டும் முடியவில்லை என்று சொல்லி இருக்கிறேன். முன்ஜாமீன் கோரி நான் தாக்கல் செய்த மனுவின் நகல் காட்டப்பட்டதுதான். அது பி.வா.சா.ஆ.17 ஆகும். பி.வா.சா.ஆ.17 ல் பாரா 12 ல் 3 ம் பங்குதாரர் ராஜேஷ் தொகையை களவாடிவிட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.17 ல் பாரா 11 ல் 3 ம் பங்குதாரர் ராஜேஷ் தான் கையொப்பம் இட்டு பதிவு செய்தார் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த விவரத்தை அறிவிப்பு, வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில்

சொல்லவில்லை. தற்போது கேட்பதால் சொல்கிறேன். 3 ம் பங்குதாரர் ராஜேஷ் எப்போது partnership ல் இருந்து விலகி சென்றால் என்று ஞாபகமில்லை. அவர் விலகி சென்றது தெரியும். அவர் விலகி சென்றதை 1,2 பிரதிவாதிகளுக்கு தெரிவித்து இருக்கிறேன். அவ்வாறு தெரிவித்ததை காட்ட ஆவண ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. 2018 ல் அவர் விலகி சென்றார் என்றால் ஞாபகமில்லை. என்னுடைய வழக்குரையில் பாரா 14 ல் சொல்லப்பட்டவாறு 3 ம் பிரதிவாதி கட்டுமானத்தில் திருத்தம் செய்ய கேட்டுக் கொண்டார் என்றும் அதற்கான தொகையை 1,2 பிரதிவாதிகள் கொடுப்பார்கள் என்று தெரிவித்தார் என்பதையும் காட்ட எந்த ஆவண ஆதாரமும் தாக்கல் செய்யவில்லை. 3 ம்பிரதிவாதி அவ்வாறு திருத்தம் செய்ய கேட்டு கொண்டது எந்த flat என்றால் எல்லா flat-களையும் திருத்தம் செய்யகோரினார். 3 ம் பிரதிவாதிக்கு allot செய்யப்பட்ட flat மட்டும்தான் திருத்தம் செய்ய கோரியதாக வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றும்,அனைத்து flat-களும் என்று சொல்லப்படவில்லை என்றும் சொன்னால் அதுபற்றி தெரியவில்லை. என்னுடைய வழக்குரையில் பாரா 10 ல் வேலைகள் முடிக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது அதற்கான ஆவண ஆதாரம் தாக்கல் செய்யவில்லை. புகைப்படங்கள் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.4 ல் உள்ள என்னுடைய கைப்பேசி எண் 9940285687 ஆகும். அதற்கு முன்பு நான் 2018 வரை பயன்படுத்திய கைப்பேசி எண் 9789947999 என்றால் சரியல்ல. 1,2 பிரதிவாதிகள் மனு தாக்கல் செய்து அதன்பேரில் வழக்கறிஞர் ஆணையர் நியமிக்கப்பட்டது தெரியும்.

வழக்கறிஞர் ஆணையர் அறிக்கையில் விடுப்பட்ட கட்டுமானத்திற்கான தொகை ரூ.48,53,630/- என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. 3 ம் பங்குதாரர் விலகியதை காரணம் காட்டி நானும்என் சகோதரரும் 1,2 பிரதிவாதிகளுக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுக்க முன்வந்தோம் என்றால் சரியல்ல. அதற்காக பள்ளிகரணை, மறைமலைநகர், சிங்கபெருமாள் கோயிலில்உள்ள பிளாட்டுகளை 1,2 பிரதிவாதிகளுக்கு காட்டினோம் என்றால் சரியல்ல. அந்த பிளாட்டுகளுக்கான ஆவண்ஙகள் சரியில்லை என்பதால் மீண்டும்கட்டுமானத்தை முடித்து தர வேண்டும் என்று 1,2 பிரதிவாதிகள் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. நாங்கள் முன்னுக்கு பின் முரணாக பேசியதால்சந்தேகப்பட்டு சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்று பார்த்தபோதுதான் 6 பிளாட்டுகளை விற்றது பிரதிவாதிகளுக்கு தெரிய வந்தது என்றால் சரியல்ல. அதனால்தான் குற்றவியல் புகார் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல. வாசா.ஆ. 3 ன் படி 3 ம் பங்குதாரர் ராஜேஷ் G1 ground floor ஐ எங்களுக்கு விற்றார் என்றால் சரிதான். எனவே 5 சதவீதம் கட்டுமானம் செய்யப்படவில்லை என்பது நிருபணம் ஆகிறது என்றால் சரியல்ல. 3 ம் பங்குதாரர் retire ஆகிவிட்டார் என்பது வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மீதான குற்றவியல் வழக்கில் இருந்து தப்பிக்க வேண்டி இந்த சிவில் வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி வழக்கிற்கு அவசியம் இல்லாத

**தரப்பினர் என்றும் எனவே அவருக்கு செலவு தொகையுடன் வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.**

**மறுவிசாரணை -இல்லை.**

T CHANDRASEKARAN

Digitally signed by T CHANDRASEKARAN
Location: Principal District Judge, Chengalpattu